திரு. எம் அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்புடைய Connected, incidental, supplementary questions. ஆகவே, அது குறித்து அரசு என்ன சொல்ல விரும்புகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய எல்லா கூட்டுறவுச் சங்கங்களிலும் ஸ்பெசல் ஆபீசர்கள் இருப்பதாக நினைப்பது தவறு. மொத்தம் 25,042 கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் இயங்குகின்றன. அதிலே 4,660 கூட்டுறவுச் சங்கங்களில்தான் ஸ்பெசல் ஆபீசர்கள் இருக்கிறார்கள். மீதி உள்ள சங்கங்களில் 1976 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள் யார் யார் நிர்வாகத்தில் இருந்தார்களோ அவர்கள் தான் தொடர்ந்து இருந்துகொண்டு வருகிறார்கள்.

சத்துணவு ஊழியர்கள் ஊதியம்,

10—(*வினா எண், 5) திரு. எள். பழனிவேல் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சத்துணவு ஊழியர்களுக்கு அரசு ஊழியர்கள் போல் ஊதியம் நிர்ணயம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): சத்துணவுப் பணியாளர்கள் மதிப்பூதியம் பெறும் பகுதிநேரப் பணியாளர்களாவார்கள். அவர்களை நிரந்தரப் பகுதி நேரப் பணியாளர்களாக்குவது பற்றிய செயற்குறிப்பு அரசின் ஆய்விலுள்ளது, மேலும் இந்தப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களைப்போல ஊதியம் அளிக்கப்பட்டால் அரசுக்குப் பெருத்த நிதிச் செலவு ஆகும். மேலும் இந்தப் பணியாளர்கள் சங்கங்கள் ஊதிய உயர்வு வேண்டி ஐந்தாவது தமிழ்நாடு ஊதியக் குழுவுக்கு அவர்கள் வாங்கும் ஊதியத்தை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே ஊதியக் குழுவின் பரிந்துரை வந்த பிறகுதான் இவர்களின் ஊதியம் மறு நிர்ணயம் செய்வது பற்றி முடிவு எடுக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. என், பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு ஊழியர்கள் பாதி நேர ஊழியர்கள் என்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் பாதி நேரம் என்பதே காலைஅல்ல 9 மணிக்குச் சென்று

விடுகிறார்கள். அவர்கள் மாலை 3 மணி அல்லது 4 மணி வரை அங்கே இருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, பாதி நேர ஊழியர்கள் இவர்கள் என்று எந்தக் கணக்கில் சொல்கிறார்கள் என்பதோடு அவர்களுக்கு இன்றைக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் 150 ரூபாய், 175 ரூபாய். அதிலே கூட அவர்கள், வேறு பலருக்கு நிதி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அரசு உடனடியாக அவர்களை முழு நேர ஊழியர்களாக ஏற்று அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ எல்லா சத்துணவுக் கூடங்களிலும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பணியாளர்கள் இந்தப் பணிகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் பாதி நேர ஊழியர்கள் அல்ல, பகுதி நேர, பார்ட் டைம் ஊழியர்கள் என்று கருதப்படுபவர்கள். காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரைதான் அவர்களுக்கு வேலை நேரம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, தொடர்ந்து அவர்களை அரசு ஊழியர்களாக நாம் நியமிக்க வேண்டியிருக்குமானால் அவர்கள் அந்தப் பள்ளியில் பணியாற்றுவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். அப்படிப் பணியாற்றவேண்டும் என்றால் அவர்களுக்கு அதற்கான தகுதி இருக்கவேண்டும். எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டுதான் அவர்களைப் பகுதி நேர ஊழியர்களாக நியமித்து எவ்வளவு நேரம் அவர்கள் பணியாற்றுகிறார்களோ அதற்கு ஏற்ப ஊதியம் நிர்ணயம் செய்யப் பெற்றிருக்கிறது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் காலையிலிருந்து மதியம் 2 மணி வரைதான் பணியில் அமர்த்தப்படுகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது ஒரு முக்கியமான கேள்வி. 2½ லட்சம் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட கேள்வி. அவர்கள் தகுதி அடிப்படையிலேதான் இந்தச் சத்துணவுத்திட்டம் வந்த காலத்திலே அமர்த்தப்பட்டார்கள். ஆகவே அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவது மிகமிக முக்கியம் என்பதோடு இதை அரசு பரிவோடு கவனிக்காவிட்டால் ஊழல்கள் நடப்பதற்குச் சந்தர்ப்பம் இருக்கிறது, நடந்து கொண்டிருக்கிறது, அது வேறு விஷயம். அதைப் பேசுவதற்கு இப்போது நேரம் இல்லை. அத்தோடு ஐந்தாவது ஊதியக் கமிஷனுடைய பரிந்துரை வந்ததற்குப் பின்னால் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்கென்று பல்வேறு அமைப்புகள் இருக்கின்றன. அவர்கள் சங்கம் வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்தினரோடு அமைச்சர் அவர்கள் பேசி அதற்கு ஒரு நல்ல முடிவை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி அடிப்படையில் எடுக்கப் பட்டவர்கள்—இரண்டு வயது முதல் 5 வயது முடிய இருக்கிற

குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகத்திலேதான் தகுதி
அடிப்படையிலே அவர்களெல்லாம் வேலைக்கு எடுத்துக்
கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களால்தான் குழந்தை
களுக்குப் பாடங்களைச் சொல்லித் தரவும், திருக்குறளை கற்றுத்
தரவுமான தகுதி இருக்கிறதென்பதை நிர்ணயம் செய்து
குழந்தைகள் காப்பகத்திலே இருக்கின்றவர்களுக்குத்தான் அப்
படிப்பட்ட பணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாதாரண பள்ளிகளில்,
இருக்கிற சத்துணவுக் கூடங்களில் தகுதி அடிப்படையிலே
யாரும் நிர்ணயம் செய்யப்படுவதில்லை. இன்றைக்குப் பல்வேறு
அமைப்புகள் அரசை அணுகி தங்களுடைய குறைகளை, கோரிக்
கைகளை முன் வைத்து இருக்கிறார்கள். ஐந்தாவது ஊதியக்
குழு தன்னுடைய பரிந்துரையை சமர்ப்பித்ததற்குப் பின்னால்
அவர்களுக்கான ஊதிய உயர்வு எவ்வளவு வழங்க முடியும் என்
பதை, அரசு நிதி நிலையைப் பொறுத்து நிர்ணயம் செய்ய
முடியும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. ரவி அருணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு போன்ற பணிகளில்
சத்துணவு ஊழியர்களை ஈடுபடுத்துவதால் அவர்களுடைய
பணியை சரிவர செய்ய முடியவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடு
அரசின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதைப்
பற்றிய பரிசீலனை அரசின் செயற்குறிப்பிலே உள்ளது.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சத்துணவுக் கூடங்கள் செயல்படுகின்ற முறைகளைச்
சென்று பார்க்க, அதிலிருக்கின்ற குறைகளை அரசுக்கு எடுத்து
வைக்க சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிமை உண்டா என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அந்த உரிமை வழங்
கப்படவில்லை. சத்துணவுக் கூடங்களை எப்படி கண்காணிப்பது,
அந்தப் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்பதைப்பற்றிய
பரிசீலனை அரசின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கிறது.
அந்தப் பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு அறிவிப்புகள் வெளி
யிடப்படும்.

திரு. கே. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சத்துணவு அமைப்பாளர்களின் நியமனத்திற்குரிய
கல்வித் தகுதி என்ன? தற்போது அவர்களை நியமனம் செய்கிற
அதிகாரம் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது என அறிய விரும்பு
கிறேன்.

1989 மார்ச் 29]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்களுக் குரிய கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். எந்தப் பகுதியில் சத்துணவுப் பணியாளர் பணி தேவைப்படுகிறதோ அந்தப் பகுதியிலுள்ள உள்ளாட்சி மன்றத் தலைவர் இரண்டு மூன்று பெயரைப் பரிந்துரை செய்து அந்தப் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவருடைய நேர்முக உதவி யாளருக்கு இந்தப் பணிக்கென்றே அமர்த்தப்பட்டிருக்கிற (Noon meal) பி. ஏ. என்று சொல்லப்படுகின்றவரிடம் அனுப் பப்பட்டு அந்தப் பட்டியலிலுள்ள பெயரை சத்துணவு பி. ஏ, அவர்கள் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அந்த உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார்கள்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு அவைத் தலைவர் அவர் களே, சத்துணவுக் கூடத்திலே வேலை பார்க்கின்ற அமைப் பாளர்கள் தவறு செய்தால் அவர்களை இடமாற்றம் செய் வதற்குரிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்படுமா? இல்லை, இப்போதிருக்கிற முறையில் அவர்கள் தவறு செய்தால்—சஸ் பென்சன் செய்வதும் அல்லது 'டிஸ்மிஸ் செய்யப்படுகின்ற முறையை மாற்றி அவர்களை டிஸ்மிஸ் செய்வது அல்லது சஸ் பென்சன் செய்வதற்கு இடம் கொடுக்காமல் அவர்கள் தவறு செய்தால்—இடம் மாற்றம் கொடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்கின்ற சத்துணவு அமைப்பாளர்கள் மீது இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கை அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்வது அல்லது வேலை நீக்கம் செய்வதுதான். இடம் மாறுதல் செய் வது என்பது மிகுந்த சிக்கலை உருவாக்கக் கூடிய ஒன்று. 5 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்திற்குள்ளேயிருந்து சத்துணவு அமைப்பாளர்கள் சத்துணவு மையங்களுக்குத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அவர்களுக்குத் தருகின்ற ஊதியமோ நீங்கள் எல்லோரும் குறைவு என்று சொல்கிறீர்கள். எனவே, 15, 20 கிலோ மீட்டருக்கு அப்பால் ஒரு மையத்திற்கு அவர்களை மாறு தல் செய்தால் அவர்கள் போக்குவரத்திற்கான செலவுத் தொகை மற்றும் அவர்கள் உரிய காலத்திலே போய்ச் சேருவது தாமதமாகும் என்பனவற்றைக் கருதித்தான் அவர்களுக்கு மாறுதல் என்ற அந்தத் தண்டனையை அளிக்காமல் அவர்களை மாற்றக் கூடாது என்று சொல்லி தற்காலிகப் பணிநீக்கம் அல்லது அவர்கள் செய்த முறைகேடுகள் அதிகமாக இருக்குமேயானால் பணிநீக்கம் என்ற அளவிலே இப்போது தண்டனை வழங்கப் படுகிறது.

(முற்பகல் 9–40)

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த அரசு சத்துணவுப் பணியாளர்களை மாறுதல் செய்யக்கூடாது என்றும், அவர்கள் 5 கிலோ மீட்டர் தொலைவுக்குள்தான் குடியிருக்க வேண்டுமென்றும் அறிவித்திருக்கிறது. ஆனால் நியமிக்கப்பட்ட சத்துணவு ஊழியர்கள் ஏற்கெனவே 25 கிலோ மீட்டர் தூரத்திலிருந்துதான் வருகிறார்கள். ஆகவே, தவறு செய்கின்றவர்களை இடமாற்றம் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது குறிப்பிடக் கூடிய அளவுக்கு இதில் குறைபாடு இருந்தால், அதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அந்தக் குறைபாடு நிவர்த்தி செய்யப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவரவர்களே, சத்துணவுப் பணியாளர்களில் 95 சதவீதத்திற்குமேல் பெண்களாக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக இளம் பெண்களாக இருக்கிறார்கள். அவர்களே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு ஆள் கொண்டுவர இன்றைக்கும் அனுப்பப்படுகின்ற நிலைமை இருக்கிறது. அதனால் அவர்கள் வாங்கக்கூடிய சம்பளத்தை 'புரோக்கர்'களுக்குக் கொடுத்து ஆள் பிடித்துவரும் சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலைமையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றி விடை அளித்திருக்கிறேன். இந்தக் குறைபாடு அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதுபற்றி கவனித்து தக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

திரு. எல். மூக்கையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் நடைபெறுகின்ற ஊழல்களையும் குறைபாடுகளையும் அந்த அமைப்பாளர்களிடம் சுட்டிக்காட்டி, இப்படிப்பட்ட குறைபாடுகள் நடக்காமல் திருத்திக் கொள்ளுங்கள் என்று தெரிவிக்கும்போது, நாங்கள் மாதம் மூன்று '' கேஸ் '' கள் குடும்பக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது ; அரசு கொடுக்கின்ற உதவிப் பணத்திற்குமேல் நாங்கள் கூடுதலாக ஒரு கேசுக்கு 100 ரூபாய் கொடுத்துதான் அழைத்துவர வேண்டியிருக்கிறது ; ஆகவே, இப்படிப்பட்ட தவறு செய்தாக வேண்டியிருக்கிறது, வேறு வழியில்லை ; குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மாதம் மூன்று கேஸ்கள் கொண்டுவர வில்லை என்றால் ஆணையாளர் எங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கிறார், ஆகவே தவறு செய்ய வேண்டிய நிலைமை

1989 மார்ச் 29]

ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, குடும்பக் கட்டுப் பாட்டிற்கு கட்டாயமாக ஆள் கொண்டுவர வேண்டுமென்ற நிலைமை நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறைபாடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தக் குறை பாட்டைப் போக்குவதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிவோடு பரிசீலிப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

திருமதி எஸ். பி. சற்குணம்: தலைவரவர்களே, என்னு டைய தொகுதியில் 8 ஆவது வட்டத்தில் திருவொற்றியூர் நெடுஞ் சாலையில் இருக்கின்ற மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத் திற்குள் ஒரே இடத்தில் ஆறு சத்துணவு மையங்கள் இருக்கின்றன. அங்கே பணியாற்றுகின்ற ஊழியர்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து, நீண்ட தூரத்திலிருந்து குழந்தைகளை அழைத்து வரவேண்டிய சிரமம் இருக்கிறது. எனவே, அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற குழந்தைகள் பயன்பெறும் வகையில் அந்தந்தப் பகுதியிலேயே சத்துணவு மையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் நல மையம் அமைக்கப்பட்டபோது ஆங்காங்கே இட நெருக்கடி காரணமாக கிடைத்த இடத்தில் 2, 3 மையங்களை ஒன்றாக வைத்து, சுற்று வட்டாரங்களில் இருக்கிற குழந்தைகள் அங்கே வரக்கூடிய சூழ் நிலை உருவாக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப் போல இன்னும் பல பகுதிகளிலிருந்து பிரச்சினைகள் அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றன. மாநக ராட்சியில் இருக்கின்ற இப்படிப்பட்ட குழந்தைகள் நல மையங் களை தனித்தனியாகப் பிரித்து, அந்தந்தப் பகுதியிலேயே அமைக்க முடியுமா என்று மாநகராட்சி ஆணையாளரைக் கேட்டி ருக்கிறோம். இதிலே இருக்கின்ற சங்கடங்கள் என்னவென்றால் இட நெருக்கடி, அடுத்து நிதி நெருக்கடி. இந்த இரண்டையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. கோ. பூவராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையத்தில் பணியாற்றுகின்ற அத்தனை ஊழியர்களும் அரசாங்க ஊழியர்களைப்போல பணியாற்றுகிறார் கள். மற்ற அரசாங்க ஊழியர்கள் வாரத்தில் ஐந்து நாட்கள்தான் வேலை செய்கிறார்கள். ஆனால் சத்துணவு மையத்தில் பணி யாற்றுகின்றவர்கள் கூடுதலாக இரண்டு நாட்கள், அதாவது சனி, ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களிலும் பணியாற்றுகிறார்கள்.

ஆகவே, அவர்களுக்கு இரண்டு நாட்களும் விடுமுறை அளிக்க வேண்டும் அல்லது அதிகமாக வேலை செய்வதால் அதிக ஊதியம் அளிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுப் பணியாளர்கள் அமைப்பின் சார்பாக இதைப்போன்ற கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இது குழந்தைகளுக்கு உணவு வழங்குகிற திட்டம் என்பதன் காரணமாக, ஏற்கெனவே அவர்கள் பணியில் அமர்த்தப்படுகிறபோதே விடுமுறை இல்லாமல் தொடர்ந்து பணி யாற்றவேண்டும் என்ற ஒரு விதியின் அடிப்படையில்தான் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு நாள் ஒய்வு வழங்க வேண்டு மென்று அவர்கள் விடுத்திருக்கின்ற கோரிக்கையை அரசு பரி சீலிப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை நான் அறிவித்துக் கொள்கிறேன்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சத்துணவு அமைப்பாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் களுடைய உதவியாளர்கள் நியமிப்பார்கள் என்றார்கள். இப் போதைய புது அரசாங்க அறிவிப்பின்படி ஊராட்சி ஒன்றியத் திற்கு அந்தப் பொறுப்பை ஒப்படைப்பதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. எனவே, இனிமேல் நியமிக்கப்படுகிற சத்துணவு அமைப் பாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தால் நியமிக்கப்படுவார்களா அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உதவியாளர் களால் நியமிக்கப்படுவார்களா என்பதை அரசு விளக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இதுபற்றிய அரசு ஆணை வெளியிடப்படவில்லை. இதைப்பற்றிய பரிசீலனை இன் னும் அரசின் கவனத்தில் இருந்து கொண்டிருக்கிறது. பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு, இன்றைக்குச் செயல்பட்டுக் கொண்டிருக் கிற இந்த அமைப்பை பல்வேறு இலாக்காக்களின் மூலமாக கண் காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இவைகளை எல்லாம் ஒருமுகப் படுத்தி, ஒழுங்குபடுத்தி ஒரு துறையின் மூலமாக செம்மையாகச் செயல்படுத்துவதற்கான புதிய அரசாணை வெளியிடப்படும் என் பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்கள், திருக்குறள் ஆசிரியர் கள் இந்தப் பணிகளைச் செய்துகொண்டிருப்பவர்களாகக் கருதப் படுகிறார்கள். அவர்கள் காலை 9-00 மணி முதல் 3-00 மணி வரையில் அங்கே பணி செய்கிறார்கள். அவர்களைப் பகுதி நேர

1989 மார்ச் 29]

நிரந்தர ஊழியர்கள் என்று அரசு அறிவித்திருப்பினும், தேர்தல் நேரத்தில் இப்போது ஆளும் கட்சியாக இருக்கின்ற கட்சி அவர்களை அரசு ஊழியர்கள் என்று அறிவிப்போம் என்று தான் சொன்னது, எனவே, அவர்களை முழு நேர நிரந்தர ஊழியர்களாக அறிவித்து அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற அனைத்து சலுகைகளையும் அவர்களுக்குக் கொடுக்க அரசு திட்டமிடுமா ?

இரண்டாவதாக திருக்குறள் போன்றவற்றை அவர்கள் கற்றுக் கொடுக்கிற பள்ளியோடு தொடர்புடையவர்களாக இருக்கின்ற காரணத்தால் முழுமையாக அவர்களைக் கல்வி இலாக்காவிலிருந்து எடுத்து ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒப்படைப்பது பற்றி மீண்டும் பரிசீலனை செய்து, இரண்டு துறைகளுக்கும் அதாவது ஊராட்சி ஒன்றியத்திற்கும் அதிலே ஒரு கண்காணிப்பு உரிமை கொடுத்து முன்போலவே அவர்களுக்கு கல்வி இலாக்காவோடு தொடர்பு ஏற்படுவதற்குரிய வாய்ப்பை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிரு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டம் இரண்டு கட்டமாகச் செயல்படுகிறது. இரண்டு வயதுக்கு மேற்பட்ட ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை உள்ளடக்கிய குழந்தைகள் நல மையம் என்ற அடிப்படையிலும், ஒன்றாம் வகுப்பிலிருந்து 10 ஆம் வகுப்பு வரை படிக்கிற ஆரம்பப்பள்ளி, நடுத்தரப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலுகிற மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலும் இப்படி இவை இரண்டு கட்டமாகச் செயல் படுகிறது. இந்த மையத்திலே பணியாற்றுகிற குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு, சத்துணவு அமைப்பாளர்களைக் காட்டிலும் ஊதியம் சற்று கூடுதலாகத்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இவர்களை உள்ளாட்சி மன்றத்தின் கீழ் கொண்டு வருவதா, வேண்டாமா என்ற ஒரு பரிசீலனை அரசின் செயற்குறிப்பில் உள்ளது.

(முற்பகல் 9-50)

மைய, மாநில அரசுகள் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்கள்.

11—(*வினா எண் *86*) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 முதல் 1988 வரை மைய அரசும் மாநில அரசும் பங்கு வீதம் போட்டு மேற்கொண்ட திட்டங்கள் யாவை ?

(ஆ) அவற்றில் மாநில அரசு பங்குவீதம் செலுத்தாததால் நிறைவேறாத திட்டங்கள் எவையேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?